**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: திரு.ஜெ.தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.68/2016**

**CASE SUMMARY**

| Sl.No. | Description | Remarks | |
|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | Remanded on : A1,A2- Nil (AB)<br>Released on :A1,A2- 20.11.2015(Surrender) | |
| 2 | The date of filing of complaint/final report in the Court | 16.08.2016 | |
| 3 | The date of committal of the case to the Court of Sessions | Not Applicable | |
| 4 | The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be | 05.10.2016 | |
| 5 | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code . | NIL | |
| 6 | Date of examination in Chief and Cross examination of a witness | Chief<br>P.W.1 – 18.07.2025 | Cross<br>18.07.2025 |
| | | P.W.2 – 25.07.2025 | 25.07.2025 |
| | | P.W.3 – 28.10.2025 | 28.10.2025 |
| | | P.W.4 _ 30.03.2026 | 30.03.2026 |
| | | P.W.5 _ 06.04.2026 | 06.04.2026 |
| 7 | Date of examination of the accused under section 351(1)(b) BNSS of the Court | 07.04.2026 | |
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | Not Applicable | |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | Not Applicable | |



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 19:32:11 +0530

**// எதிராக//**

| | | |
|---|---|---|
| **அரசுக்காக:**<br>**காவல் உதவி ஆய்வாளர்,**<br>மன்னார்குடி காவல் நிலையம்,<br>குற்ற எண்.1082/2015<br>ச/பி 294(b),323 IPC ,<br>4 of TNPWH Act | | .............குற்ற முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| 1.பிரகாஷ்,34/2015,<br>த/பெ. பக்கிரிசாமி,<br>11/5 காமாட்சி அம்மன்<br>கோவில் தெரு,<br>மன்னார்குடி. | | ……எதிரிகள் |
| 2.தனபால்,39/2015,<br>த/பெ.ரெத்தினம்,<br>அய்யம்பெருமாள் தெரு,<br>நான்காம்சேத்தி,<br>சேரன்குளம். | | |

இவ்வழக்கானது கடந்த 18.08.2016 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 07.04.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை.2 அவர்களும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.துரை.வீரையன்,B.A.,BL., அவர்கள் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (16.04.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்........

**//தீர்ப்புரை//**

**<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.</u>**

கடந்த 12.11.2015 ம் தேதி மாலை 05.00 மணியளவில் மன்னார்குடி அசேஷம் பூக்கொல்லையில் உள்ள வாதியின் அம்மா சாட்சி 2 க்கு சொந்தமான இடத்தில் உள்ள கொட்டகை சாய்ந்து கிடந்ததை சாட்சி 1,2 பார்த்தும் அப்போது அங்கு வந்த இவ்வழக்கின் 1 வது எதிரியிடம் சாட்சிகள் 1,2 இருவரும் "எங்க கொட்டகையை தள்ளிவிட்டது யாரு" என்று கேட்டதற்கு 1 வது எதிரி கொட்டகை சாய்ந்ததை பற்றி



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.04.16 19:32:22 +0530

என்னிடம் ஏன்டி கேட்கிறீங்க தேவடியா குச்சிக்காரி செருக்கிகளா நான் தள்ளியதை நீங்க பார்த்திங்களா என வாய்க்கு வந்தபடி அசிங்கமாக பேசியதை 1,2 சாட்சிகள் மரியாதையாக பேசு என்று சொன்னவர்களை 1வது எதிரி என்னடி மரியாதை மயிறு வேண்டிகிடக்கு என சொல்லி சாட்சி 1–ன் தலை முடியினை பிடித்து கீழே தள்ளி காலால் உதைத்து கம்பால் இடது காதில் அடித்து " சொற்பக்காயம் " உண்டு பண்ணியும் 2 வது எதிரி சாட்சி 2–ன் சேலையை பிடித்து இழுத்து மானபங்கம் செய்தும் முதுகிலும், கன்னத்திலும் கையால் அடித்து " சொற்பகாயம்" உண்டு பண்ணியும் எதிரிகள் 1,2 சாட்சிகளின் பெண்மைக்கு பங்கம் உண்டாகும் படி நடந்தும், எனவே 1 எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b),323, 4 of TNPWH Act இதச படியும், 2வது எதிரியின் செய்கையானது இதச பிரிவு 323 மற்றும் 4 of TNPWH Act–ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக மன்னார்குடி நகர காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. நகல் வழங்கல்**

எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகளுக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் நகல் இலவசமாக வழங்கப்பட்டன.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b),323, 4 of TNPWH Act ன் கீழும், கு.வி.மு.ச பிரிவு 240(1)ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகளின் குற்றச்சாட்டை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் **அ.சாஆ.1 முதல் அ.சாஆ.6** வரையும், சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4.அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

அசா.1 சித்ரா தனது சாட்சியத்தில் தான் மேற்கண்ட முகவரியில் வசித்து பூக்கடை வைத்துள்ளேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும, தங்கள் அப்பா வீட்டு பூர்வீக சொத்தான 6ம் நம்பர் வாய்க்காலில் உள்ள இடத்தில் நாங்கள் கொட்டகை போட்டு இருந்தோம் என்றும், கடந்த 12.11.2015ம் தேதியன்று மாலை 05.00 மணியளவில் தானும், தனது அம்மா கண்ணம்மாவும் கொட்டகையை பார்க்கும் போது அது சாய்ந்து கிடந்தது என்றும், அந்த இடத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் நின்று கொண்டிருந்தனர் என்றும் அவர்கள் அங்கு நின்றுகொண்டிருந்ததால் கொட்டகை ஏன் சாய்ந்து கிடக்கிறது என்று கேட்டோம் என்றும் உங்கள் கொட்டகை சாய்ந்து கிடந்தால் நாங்கள் என்ன பன்னுவது என்று குச்சிகாரி, தேவடியா என்று அசிங்கமான



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 19:32:32 +0530

வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், தான் ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு 1வது எதிரி தனது தலை முடியை இழுத்து கீழே தள்ளி காலால் உதைத்தார் என்றும் 1 வது எதிரி தன்னை அடித்துக்கொண்டிருக்கும் போதே தனது அம்மா கேட்டபோது 2 வது எதிரி தனது அம்மாவை அடித்து கீழே தள்ளியதில் அருகில் இருந்த சேத்து வயலில் விழுந்துவிட்டோம் என்றும், அப்போது அங்கிருந்த 1 வது எதிரியின் அக்கா, அம்மா ஆகியோரும் தன்னை தாக்கினர் என்றும், அன்று இரவு தாங்கள் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு எடுத்துக்கொண்டோம் என்றும், நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்தது தான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பபட்டுள்ளது என்றும், சாட்சியமளித்துள்ளார்.

அசா 2 கண்ணம்மாள் தனது சாட்சியத்தில் தான் மேற்கண்ட முகவரியில் வசித்து பழக்கடை வைத்துள்ளேன் என்றும், அசா.1 தன்னுடைய மகள் ஆவார் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 12.11.2015 ம் தேதி மாலை 05.30 மணியளவில் தானும், தனது மகளும் தங்களுடைய கொல்லைக்கு சென்றோம் என்றும், தங்கள் கொல்லையில் தாங்கள் போட்டியிருந்த கொட்டகை விழுந்து கிடந்தது என்றும், அந்த பக்கமாக ஆஜர் எதிரிகள் இருவரும் வந்து கொண்டிருந்தனர் என்றும், ஏன் எங்கள் கொட்டகை விழுந்து விட்டது என தான் கேட்டேன் என்றும், உங்கள் கொட்டகை விழுந்து கிடந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்டார்கள் தான் ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு தங்களை குச்சிகாரி மகளே, தேவடியா மகளே என்று தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும், நாங்கள் ஏன் என்று கேட்டதற்கு தனபால் தன்னுடைய முடியைபிடித்து இழுத்து புடவையை உருவி தன்னுடைய முதுகிலும், கன்னத்திலும் மாறி மாறி அடித்தார் என்றும், பிரகாஷ் அருகில் இருந்தார் தன்மகள் ஏன் தனது அம்மாவை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு பிரகாஷ் தனது மகளான அசா.1 ஐ கட்டையால் அடித்தார் என்றும், கட்டையால் அடித்ததில் தனது மகளின் வலது பக்க காது கிழிந்து விட்டது என்றும், மன்னார்குடி அரசு மருத்துவமனை சென்று காதில் தையல் போட்டோம் என்றும், தன்னை தாக்கியதில் தனது முதுகில் உள்காயமாக இருந்தது என்றும் தன்னுடைய ஜாக்கெட் கிழிந்து விட்டது என்றும், அன்று இரவே மன்னார்குடி அரசு மருத்துவமனையில் தானும், மகளும் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றும், மறுநாள் காலை போலீசார் எங்களை விசாரித்து வாக்குமூலம் எழுதி கொண்டனர் என்றும் நடந்த விபரங்களை கூறினோம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா.3 செல்வி தனது சாட்சியத்தில் தான் மேற்கண்ட முகவரியில் வசித்து தனியார் பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன் என்றும் அசா 1 மற்றும் அசா



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 19:32:41 +0530

2 ஆகியோர் தன்னுடைய அக்கா மற்றும் அம்மா ஆவார்கள் என்றும் வழக்கின் எதிரிகளை தெரியும் என்றும் கடந்த 12.11.2015 ஆம் தேதி மதியம் தான் தன்னுடைய ஊரான கணபதி அக்ரஹாரத்தில் இருந்து மன்னார்குடி காமாட்சியம்மன் தெருவில் உள்ள தனது அம்மா அசா 2 ன் வீட்டிற்கு சென்றேன் என்றும் பிறகு மாலை சுமாராக 5 மணியளவில் நானும், அசா 1, அசா2 ஆகியோர்கள் மன்னார்குடி அசேசத்தில் உள்ள தனது அம்மாவிற்கு சொந்தமான பூக்கொல்லைக்கு சென்றோம் என்றும் அப்போது தாங்கள் மூவரும் பூக்கொல்லையில் பேசிக்கொண்டிருந்தபோது அங்கிருந்த ஆஜர் எதிரியும் எதிரி தனபாலும் தங்களிடம் தானாகவே வந்து பிரச்சனை செய்தார்கள் என்றும் அப்போது ஆஜர் எதிரி தனது அக்கா அசா 1 ஐ குச்சிக்காரி, தேவடியா என்று அசிங்கமாக திட்டி, அவருடைய தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி காலால் உதைத்தார் என்றும் 2 வது எதிரி தனபால் தனது அம்மாவின் சேலையை பிடித்து இழுத்து கீழே தள்ளி அவருடைய கன்னத்திலும், முதுகிலும் கையால் அடித்தார் என்றும் இருவரையும் பெண் என்று கூட பார்க்காமல் அசிங்கப்படுத்தி, மானப்பங்கப்படுத்தி விட்டனர் என்றும் அதைப்பார்த்து விட்டு தான் சத்தம் போடவும் அருகில் இருந்தவர்கள் அங்கு வந்தவுடன் இருவரும் அங்கிருந்து ஓடி விட்டனர் என்றும் பின்னர் தனது அக்காவையும், அம்மாவையும் சிகிச்சைக்காக மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன் என்றும் மறுநாள் போலீசார் தனது அக்காவும், அம்மாவும் சிகிச்சையில் இருக்கும்போது வந்து விசாரித்தனர் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா 4 கௌதமர் தனது சாட்சியத்தில் தான் தற்போது கந்தர்வக்கோட்டை, அரசு மருத்துவமனையில் குடிமுறை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் தான் ராமகிருஷ்ணன் என்ற தனது பெயரை தற்பொழுது V.G. கௌதமர் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்றும் தான் கடந்த 12.11.2015 ஆம் தேதி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, மன்னார்குடியில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது மாலை 7.55 மணிக்கு அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருக்கும்போதும் 25 வயது மதிக்கத்தக்க மன்னார்குடி மேல ஒத்தை தெருவை சேர்ந்த சித்ரா என்பவரும், 42 வயது மதிக்கத்தக்க கண்ணம்மாள் என்பவரும் அவர்களை 2 தெரிந்த நபர்கள் அரிவாள் மற்றும் கட்டையால் மாலை 05.30 மணிக்கு தாக்கியதாக கூறினார் என்றும் சித்ரா என்பவருக்கு இடது காது மடலில் சிதைந்த காயம் இருந்தது என்றும் அவரை உள்நோயாளியாக மருத்துவமனையில் அனுமதித்தேன் என்றும் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பக்காயம் என்று சான்று வழங்கினேன் என்றும் மேற்படி விபத்து பதிவேட்டுடன் இணைந்து காயச்சான்று அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதே சம்பவத்தில் கண்ணம்மாள் என்பவருக்கும் வெளிக்காயங்கள் எதுவும் இல்லை என்றும் அவரை வெளிநோயாளியாக சிகிச்சையளித்தேன் என்றும் கண்ணம்மாளுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன் என்றும் மேற்படி விபத்து பதிவேட்டுடன்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.04.16 19:32:49 +0530

இணைந்த காயச்சான்று அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா5 தெட்சிணாமூர்த்தி தான் தற்போது திருவாரூர் மாவட்டம், தேவங்குடி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன் என்றும், கடந்த 13.11.2015 ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு மன்னார்குடி நகர காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கார்த்திகேயன் மனைவி சித்ரா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண். 1082–2015 ல் 294(பி), 323 இதச and 4 of TNPHW Act ன் கீழ் எதிரியின் மீது வழக்கு பதிவு செய்தேன் என்றும் அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நாள் அன்றைய தினமே பிற்பகல் 12.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சாராங்கபாணி மற்றும் ரெத்தினம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் பார்வை மகசர் மற்றும் வரைபடம் அசா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும் சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரியை தேடிய போது எதிரிகள் முன்பிணையம் பெற்ற விபரம் தெரிந்து கொண்டேன் என்றும் மேற்படி வழக்கு கோப்பை அடுத்தக்கட்ட விசாரணைக்காக ஆய்வாளர் சுப்பிரியா பார்வைக்கு வைத்தேன் என்றும் உதவி ஆய்வாளரின் கையொப்பம் மற்றும் அவருடன் பணியாற்றி வகையில் நன்கு தெரியும் என்பதாலும், ஆவணங்களின் அடிப்படையில் காலதாமத்தை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் இச்சம்பவத்தில் காயம்பட்ட சித்ரா மற்றும் கண்ணம்மாள் ஆகியோருக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேடுகளுடன் இணைந்த காயச்சான்று பெற்று தாக்கல் செய்துள்ளார் என்றும் இது ஏற்கனவே அசா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் இத்துடன் அவரது விசாரணையை முடித்து 1 வது எதிரியின் செய்கையானது 294(பி), 323 இதச and 4 of TNPHW Act ன் படியும், 2 வது எதிரியின் செய்கையானது 323 இதச மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 30.11.2015 ம் தேதி தாக்கல் செய்துள்ளளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5. எதிரிகளிடம் பிரிவு 351 (1)(b) BNSS ன் கீழ் வினவுதல்**

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம் என்றும் பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ, ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

**6. தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம்**

இவ்வழக்கின் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

**7.** அரசுத்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**8.** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகள் மீது புகார்தாரரால் பொய்யான புகார் கொடுக்கப்பட்டு வழக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**9. தீர்வு :**

இவ்வழக்கின் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323 மற்றும் 4 of TNPHW ACT ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேலும், அரசுத்தரப்பில் அசா 1 முதல் 5 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சிகள்4,5,6,9 ஆகிய சாட்சிகள் அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் விசாரணை அதிகாரியான பட்டியல் சாட்சி 9 காவல் உதவி ஆய்வாளர் திருமதி. S. சுப்ரியா அரசுத்தரப்பில் நீக்கரவு செய்யப்பட்டு அவருக்கு பதிலாக காவல் உதவி ஆய்வாளர் திரு.தெட்சிணாமூர்த்தி என்பவரை சாட்சியாக சேர்த்து விசாரிக்க கோரியதன் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டு அசா 5 ஆக விசாரணை செய்யப்பட்டு அசாஆ. 4 முதல் அசாஆ. 6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் புகார்தாரர் அசா 1 ஆகவும், அ.சா.2 மற்றொரு காயம்பட்ட சாட்சியாகவும் அசா. 3 கண்ணுற்ற சாட்சியாகவும், அ.சா.4 மருத்துவ சாட்சியாகவும்,அசா 5 புலன் விசாரணை அதிகாரியாகவும் விசாரிக்கப்பட்டுள்ளார் .

**குற்றச்சாட்டுகளுக்கான தீர்வு**

**10.** கடந்த 12.11.2015 ம் தேதி மாலை 05.00 மணியளவில் மன்னார்குடி அசேஷம் பூக்கொல்லையில் உள்ள வாதியின் அம்மா சாட்சி 2 க்கு சொந்தமான இடத்தில் உள்ள



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.04.16 19:33:07 +0530

கொட்டகை சாய்ந்து கிடந்ததை சாட்சி 1,2 பார்த்தும் அப்போது அங்கு வந்த இவ்வழக்கின் 1வது எதிரியிடம் சாட்சிகள் 1,2 இருவரும் "எங்க கொட்டகையை தள்ளிவிட்டது யாரு " என்று கேட்டதற்கு 1 வது எதிரி கொட்டகை சாய்ந்ததை பற்றி என்னிடம் ஏன்டி கேட்கிறீங்க தேவடியா குச்சிக்காரி செருக்கிகளா நான் தள்ளியதை நீங்க பார்த்திங்களா என வாய்க்கு வந்தபடி அசிங்கமாக பேசியதை 1,2 சாட்சிகள் மரியாதையாக பேசு என்று சொன்னவர்களை 1வது எதிரி என்னடி மரியாதை மயிறு வேண்டிகிடக்கு என சொல்லி சாட்சி 1–ன் தலை முடியினை பிடித்து கீழே தள்ளி காலால் உதைத்து கம்பால் இடது காதில் அடித்து " சொற்பக்காயம் " உண்டு பண்ணியும் 2 வது எதிரி சாட்சி 2–ன் சேலையை பிடித்து இழுத்து மானபங்கம் செய்தும் முதுகிலும், கன்னத்திலும் கையால் அடித்து " சொற்பக்காயம்" உண்டு பண்ணியும் எதிரிகள் 1,2 சாட்சிகளின் பெண்மைக்கு பங்கம் உண்டாகும் படி நடந்தும், எனவே 1 எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b),323, 4 of TNPWH Act இதச படியும், 2வது எதிரியின் செய்கையானது இதச பிரிவு 323 மற்றும் 4 of TNPWH Act –ன் படியும் குற்றசாட்டு வனையப்பட்டுள்ளது.

**11.** அரசு தரப்பு பதிவு ஆவணங்களின் படி குற்ற நிகழ்வு நாள் 12.11.2015 ம் தேதி 17.30 மணி. காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.11.2015 ம் தேதி 10.00 மணி. குற்ற நிகழ்வு இடம் – 3 கி.மீ தெற்கு அசேஷம் பூக்கொல்லை ரோடு வாதியின் கொல்லை அருகில். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் பெறப்பட்ட நாள் 16.11.2015 ம் தேதி 10.30 மணி. விபத்து பதிவேட்டில் 12.11.2015 ம் தேதி 7.55 மணிக்கு 2 தெரிந்த நபர்கள் 12.11.2015 ம் தேதி 05.30 மணிக்கு அசேஷத்தில் வைத்து தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**12.** புகார்தாரர் சித்ரா கொடுத்த புகார் வாக்குமூலத்தில் "12.11.2015 ம் தேதி மாலை 05.30 மணி அளவில் எங்க அம்மாவோடு நானும் கொல்லைக்கு சென்று பார்த்த போது கொட்டகை அடியோடு சாய்ந்து கிடந்தது. எங்க கொல்லை பக்கத்தில் பிரகாஷ் வயல்கள் இருக்கிறது. அப்பொழுது பிரகாஷ்ம் அவரது வயலின் வேலை பார்க்கும் சேரன்குளம் 4ம் சேத்தி ரத்தினம் மகன் தனபால் சேர்ந்து வந்தார்கள் நானும் எனது அம்மாவும் பிரகாஷ் இடம் எங்க கொட்டகையை தள்ளிவிட்டது யாரு என்று கேட்டான். அதற்கு பிரகாஷ் கொட்டகை சாய்ந்ததை பற்றி என்னிடம் ஏன்டி கேட்கிறீங்க தேவடியா குச்சிகாரி செரிக்கிகளா நான் தள்ளியதை நீங்க பாத்திங்களா என வாய்க்கு வந்தபாடி திட்டினான். நானும் எங்க அம்மாவும் மரியாதைய பேசு என்று சொன்னோம். அப்ப பிரகாஷ் என்னடி மரியாதை மயிறி வேண்டி கிடக்கு, என சொல்லி என் தலைமுடியை பிடித்து இழுத்து கீழ தள்ளி,காலால் உதைத்தும் கம்பால் என்னை அடித்தார் அப்ப பிரகாஷ் கூடவே இருந்த தனபால் எங்க அம்மா சேலையை பிடித்து



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 19:33:15 +0530

இழுத்து முதுகிலும் கன்னத்திலும் கைகளால் அடித்தார். நான் சத்தம் போட அக்கம் பக்கம் உள்ளவர்கள் ஓடி வர இருவரும் ஓடிவிட்டார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**13.** அசா.1 செல்வி நீதிமன்ற சாட்சியத்தில் " கடந்த 12.11.2015 ம் தேதியன்று மாலை 05.00 மணியளவில் தானும், தனது அம்மா கண்ணம்மாவும் கொட்டகையை பார்க்கும் போது அது சாய்ந்து கிடந்தது என்றும், அந்த இடத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் நின்று கொண்டிருந்தனர் என்றும் அவர்கள் அங்கு நின்றுகொண்டிருந்ததால் கொட்டகை ஏன் சாய்ந்து கிடக்கிறது என்று கேட்டோம் என்றும் உங்கள் கொட்டகை சாய்ந்து கிடந்தால் நாங்கள் என்ன பன்னுவது என்று குச்சிகாரி, தேவடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்றம், தான் ஏன் இவ்வாறு பேசிகீறீர்கள் என்று கேட்டதற்கு 1வது எதிரி தனது தலை முடியை இழுத்து கீழே தள்ளி காலால் உதைத்தார் என்றும் 1 வது எதிரி தன்னை அடித்துக்கொண்டிருக்கும்போதே தனது அம்மா கேட்டபோது 2 வது எதிரி தனது அம்மாவை அடித்து கீழே தள்ளியதில் அருகில் இருந்த சேத்து வயலில் விழுந்துவிட்டோம் என்றும், அப்போது அங்கிருந்த 1 வது எதிரியின் அக்கா, அம்மா ஆகியோரும் தன்னை தாக்கினர் என்றும், அன்று இரவு தாங்கள் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டோம்" என்று சாட்சியமளித்துள்ளார்.

**14.**அசா.1 தனது முதல் விசாரணையில் தன்னுடன் தனது சகோதரி செல்வி உடன் இருந்ததாக சாட்சியமளித்துள்ளார். மேலும் அசா.1 சித்ரா தனது குறுக்கு விசாரணையில் "எங்களுக்கும் 1வது எதிரிக்கும் மன்னார்குடி காமாட்சி அம்மன் கோவில் தெருவில் உள்ள வீடு தொடர்பாகவும் பூக்கொல்லை ரோட்டில் உள்ள இடங்கள் வேறு வழக்குகள் நிலுவையில் இருந்தது என்றால் சரியல்ல பிரச்சனை தான் இருந்தது. மறுநாள் காலையில் புகார் கொடுக்க சென்ற போது காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள மனு எழுதுபவர்களிடம் எடுத்து கொண்டு போய் காவல் நிலையத்தில் கொடுத்தேன். நானும் செல்வியும் இறந்து போன கிருஷ்ணமூர்த்தியின் மகள்கள் அல்ல என்றும் என்னுடைய அம்மா கண்ணம்மா கிருஷ்ணமூர்த்தியின் சட்டப்பூர்வமான மனைவி அல்ல என்றும் இறந்து போன கிருஷ்ணமூர்த்தியின் சொத்துக்களை ஆக்கிரமித்து அபகரிக்க வேண்டும் என்பதற்காக உரிமை உள்ளது போன்ற தோற்றத்தை உருவாக்க எதிரிகள் மீது ஒரு போய் வழக்கு தயார் செய்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும்" சாட்சிமளித்துள்ளரர்.

**15.** அசா.1 சித்ரா கொடுத்த புகார் வாக்குமூலத்தில் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஓடி வந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அவர்கள் யாரும் சாட்சியாக விசாரணை செய்யபடவில்லை. மேலும் அ.சா.1 சித்ரா தன்னுடைய சாட்சியத்தில் அ.சா.2 யின் சேலையை 2 ம் எதிரி பிடித்து இழுத்ததாக சாட்சியம் அளிக்கவில்லை.



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 19:33:24 +0530

**16.**அசா.2 கண்ணம்மா தனது முதல் விசாரணையில் " கடந்த 12.11.2015 ம் தேதி மாலை 05.30 மணியளவில் தானும், தனது மகளும் தங்களுடைய கொல்லைக்கு சென்றோம் என்றும், தங்கள் கொல்லையில் தாங்கள் போட்டியிருந்த கொட்டகை விழுந்து கிடந்தது என்றும், அந்த பக்கமாக ஆஜர் எதிரிகள் இருவரும் வந்து கொண்டிருந்தனர் என்றும், ஏன் எங்கள் கொட்டகை விழுந்து விட்டது என தான் கேட்டேன் என்றும், உங்கள் கொட்டகை விழுந்து கிடந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்டார்கள் தான் ஏன் இவ்வாறு பேசுகீறீர்கள் என்று கேட்டதற்கு தங்களை குச்சிகாரி மகளே, தேவடியா மகளே என்று தகாத வார்தைகளால் திட்டினார் என்றும், நாங்கள் ஏன் என்று கேட்டதற்கு தனபால் தன்னுடைய முடியைபிடித்து இழுத்து புடவையை உருவி தன்னுடைய முதுகிலும், கன்னத்திலும் மாறி மாறி அடித்தார் என்றும், பிரகாஷ் அருகில் இருந்தார் தன்மகள் ஏன் தனது அம்மாவை அடிக்கீறீர்கள் என்று கேட்டதற்கு பிரகாஷ் தனது மகளான அசா.1 ஐ கட்டையால் அடித்தார் என்றும், கட்டையால் அடித்ததில் தனது மகளின் வலது பக்க காது கிழிந்து விட்டது என்றும், மன்னார்குடி அரசு மருத்துவமனை சென்று காதில் தையல் போட்டோம் என்றும், தன்னை தாக்கியதில் தனது முதுகில் உள்காயமாக இருந்தது என்றும் தன்னுடைய ஜாக்கெட் கிழிந்து விட்டது என்றும், அன்று இரவே மன்னார்குடி அரசு மருத்துவமனையில் தானும், மகளும் சிகிச்சைக்காக சேர்ந்தோம்"என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**17.**அசா.2 கண்ணம்மாள் தனது குறுக்கு விசாரணையில் "எதிரி பிரகாஷ்க்கும் எங்களுக்கும் 2013 ம் ஆண்டிலிருந்து பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான். பிரேம்குமார் என்பவர் எனது கணவர் கிருஷ்ணமூர்த்தியின் 2 வது மனைவியின் மகன் பிரேம்குமாரின் தாயர் பெயர் என்னவென்றால் ராணி. ராணி தான் முறைப்படி கிருஷ்ணமூர்த்திக்கு பத்திரிக்கை அச்சடித்து திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். ஆனால் எனக்கும் கிருஷ்ணமூர்த்திக்கும் பதிவு திருமணம் நடந்து பதிவு செய்யப்பட்டுள்ளது. ராணியுடன் கிருஷ்ணமூர்த்திக்கு திருமணம் நடக்கும் போது எனது மகள் சித்ரா 3 மாத குழந்தை. எனது கணவர் என்று சொல்லும் கிருஷ்ணமூர்த்தியிடம் தொடர்பு இல்லை என்றால் அவர் இறந்த வருடத்தை தவறாக சொன்னேன் என்றால் தவறு இல்லை " என்று சாட்சியமளித்துள்ளார்.

**18.**அசா.3 செல்வி தனது முதல் விசாரணையில் "கடந்த 12.11.2015 ஆம் தேதி மதியம் தான் தன்னுடைய ஊரான கணபதி அக்ரஹாரத்தில் இருந்து மன்னார்குடி காமாட்சியம்மன் தெருவில் உள்ள தனது அம்மா அசா 2 ன் வீட்டிற்கு சென்றேன் என்றும் பிறகு மாலை சுமாராக 5 மணியளவில் நானும், அசா 1, அசா2 ஆகியோர்கள் மன்னார்குடி அசேசத்தில் உள்ள தனது அம்மாவிற்கு சொந்தமான பூக்கொல்லைக்கு சென்றோம் என்றும் அப்போது தாங்கள் மூவரும் பூக்கொல்லையில்


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 19:33:34 +0530

பேசிக்கொண்டிருந்தபோது அங்கிருந்த ஆஜர் எதிரியும் எதிரி தனபாலும் தங்களிடம் தானாகவே வந்து பிரச்சனை செய்தார்கள் என்றும் அப்போது ஆஜர் எதிரி தனது அக்கா அசா 1 ஐ குச்சிக்காரி, தேவடியா என்று அசிங்கமாக திட்டி, அவருடைய தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி காலால் உதைத்தார் என்றும் 2 வது எதிரி தனபால் தனது அம்மாவின் சேலையை பிடித்து இழுத்து கீழே தள்ளி அவருடைய கன்னத்திலும், முதுகிலும் கையால் அடித்தார் என்றும் இருவரையும் பெண் என்று கூட பார்க்காமல் அசிங்கப்படுத்தி, மானப்பங்கப்படுத்தி விட்டனர் என்றும் அதைப்பார்த்து விட்டு தான் சத்தம் போடவும் அருகில் இருந்தவர்கள் அங்கு வந்தவுடன் இருவரும் அங்கிருந்து ஓடி விட்டனர் என்றும் பின்னர் தனது அக்காவையும், அம்மாவையும் சிகிச்சைக்காக மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன்" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**19.**அசா.3 செல்வி தனது குறுக்கு விசாரணையில் " எதிரி பிரகாஷ் எனது அத்தை மகன். பிரச்சனைக்குறிய சொத்து எனது தந்தைக்குரிய சொத்து என்றால் சரிதான். இந்த சொத்து தொடர்பாக திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் எதிரி பிரகாஷ் ஒரு தரப்பினராகவும் எனது தாய் ஒரு தரப்பினராகவும் இருந்து வழக்கு நடைபெற்ற வருகிறது என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் என் மீதும் எனது சகோதரி மீதும் 2 வழக்கும் எனது தாயார் மீது 3 வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். மன்னார்குடி காவல் நிலைய குற்ற.எண் 455/2014 குற்ற எண் 747/2014 என்ற குற்ற வழக்குகள் எனது சகோதரி மீது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்" சாட்சியமளித்துள்ளார்.

**20.**அசா 3 செல்வியின் சாட்சியத்தில் இருந்து செல்வி சம்பவ இடத்தில் இருந்தாகவும் சம்பவத்ததை நேரிட்டு பார்த்தாகவும் சாட்சியமளித்துள்ள நிலையில் அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர்கள் அசா.3 சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிட்டு சாட்சியமளிக்காத நிலையில் அசா.3 சம்பவ இடத்தில் இருந்தாரர? என்ற ஐயம் எழுகிறது.

**21.**அசா.5 ஆகா விசாரணை செய்யப்பட்ட புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில் "இந்த வழக்கானது எதிரிடை வழக்கு என்றால் சரிதான். இந்த வழக்கு எதிரி பிரகாஷ் கொடுத்த புகாரின் பேரில் மன்னார்குடி நகர காவல்நிலைய குற்ற எண்.1081/2015 ன்படி இந்த வழக்கினுடைய சாட்சிகள் கண்ணம்மாள், சித்ரா , செல்வி மற்றும் பாலு என்ற வேறொரு நபர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதற்கு புலன் விசாரணை அதிகாரி நான்தான் என்றால் சரிதான். குற்ற எண். 1081/2015 வழக்கின்படி நடந்ததாக சொல்லப்படும் சம்பவ ஸ்தலம் வாதியினுடைய இடத்திற்கு அருகே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரு தரப்பினர்களுக்கிடையே இருந்த சிவில் பிரச்சனை சம்பந்தமாக விசாரணை


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.04.16 19:33:42 +0530

செய்தேனா என்றால் இல்லை. எதிரிடை வழக்கு இருக்கும்பட்சத்தில் இரண்டு வழக்கினுடைய ஆவணங்கள் வாக்குமூலங்கள் ஆவணத்தை குற்ற இறுதியறிக்கையுடன் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் ஆமாம். இந்த வழக்கில் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை. காவல் நிலை ஆணை 558–ன்படி சம்பவ செயலை முதலில் தொடங்க செய்தது யார்? என்ற கோணத்தில் விசாரணையை மேற்கொண்டு இரண்டு வழக்கில் சம்பவ செயலை தொடங்கியவர் மீது முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து, மற்றொரு வழக்கை refer செய்து குற்ற இறுதியறிக்கையுடன் தாக்கல் செய்ய வேண்டும் என்ற நடைமுறையை இந்த வழக்கில் பின்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவம் உண்மை என்பதால் இரண்டு வழக்கிலும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தோம்"என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**22.**அசா.1 முதல் அசா.5 வரையிலான சாட்சிகளிலிருந்து 1வது எதிரிக்கும்,புகார்தாரர் குடும்பத்தினருக்கும் சொத்து சம்பந்தமாக சிவில் வழக்கில் நிலுவையிலிருந்து வருகிறது என்பதும், 1வது எதிரி கொடுத்த புகாரின் பெயரின் இவ்வழக்கு சம்பவத்துக்கு முன்பாகவே அசா.1 ன் மீது 2 குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதும், 1வது எதிரி கொடுத்த புகாரின் பெயரில் அசா.1 முதல் அசா.3 மற்றும் பாலு என்ற நபர்கள் மீது மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண் 1081/2015 என்ற எண்ணின் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி முறையாக விசாரணை செய்து உண்மையில் யார் வலிய சண்டையை தொடங்கியவார் என்று கண்டறியாமல் இரண்டு தரப்பினர் மீதும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதும் காவல் நிலை ஆணையை புலன் விசாரணை அதிகாரி பின்பற்றவில்லை என்பதும் தெள்ளதெளிவாக தெரியவருகிறது.

**23.**அசா.1 முதல் 3 வரையிலான சாட்சிகளின் சாட்சிங்கள் இயற்கையாகவும் நம்பும்படியாகவும் இல்லை என்றும் மேற்படி சாட்களின் சாட்சியங்கள் மிகைப்படுத்தப்பட்டதாகவும் உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அரசு தரப்பில்,சொல்லப்பட்டுள்ளவாறு வழக்கு சம்பவமானது நடந்ததா?என்ற ஐயம் எழுகிறது எனவே அசா.1 முதல் 5 வரையிலான சாட்சிகளிலிருந்து அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபனம் செய்யப்படவில்லை என்றும் நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**24.**எனவே, மேலே விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட இவ்வழக்கின் 1வது எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b),323, 4 of TNPWH Act ன் கீழும், 2வது எதிரி மீதான இதச பிரிவு 323, 4 of TNPWH Act ன் கீழான குற்றச்சாட்டுகள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பால் மெய்ப்பிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**25.** இறுதியாக , இவ்வழக்கின் 1வது எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b),323, 4



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 19:33:50 +0530

of TNPWH Act ன் கீழும், 2 வது எதிரி மீதான இதச பிரிவு 323, 4 of TNPWH Act ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, பிரிவு 271(1) BNSS ன் கீழ் எதிரிகளை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

**26.** இவ்வழக்கில் வழக்குச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**27.**எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு , இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 19:33:59 +0530

நீதித்துறை நடுவர் எண்: 1
மன்னார்குடி.

**1.அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அசா.1 | சித்ரா |
| அசா.2 | கண்ணம்மாள் |
| அசா.3 | செல்வி |
| அசா.4 | திரு.V.G.கௌதமர்–மருத்துவர் |
| அசா.5 | தெட்சிணாமூர்த்தி – காவல் உதவி ஆய்வாளர் ( கூடுதல் சாட்சி ) |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அசா.1 | 16.11.2015 | புகார் வாக்குமூலம் (அ.சா.1 மூலம்) |
| அசா.2 | 12.11.2015 | மேற்படி விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்று (அ.சா. 4 மூலம்) |
| அசா.3 | 12.11.2015 | மேற்படி விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்று (அ.சா.4 மூலம்) |
| அசா.4 | 13.11.2015 | முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் (அ.சா.5 மூலம்) |



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 19:34:31 +0530

| | | |
|---|---|---|
| அசா.5 | 13.11.2015 | பார்வை மகசர் (அ.சா.5 மூலம்) |
| அசா.6 | 13.11.2015 | வரைபடம் (அ.சா.5 மூலம்) |

3. அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை.

4. எதிரிகள் தரப்பு சாட்சிகள் , சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் : இல்லை.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 19:34:38 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
மன்னார்குடி.

**குறிப்பு**

1) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தார்.

2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3)வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 19:34:45 +0530